# வாக்கியம் அமைத்தல்

( ஆ சொற்கள் )

1. **ஆலோசனை**

பெரியோரிடம் ஆலோசனை கேட்டு நடக்க வேண்டும்.

2. **ஆணி**

மேனகா சுவற்றில் ஆணி அடித்தாள்.

3. **ஆயுள்**

மனிதனின் சராசரி ஆயுள் 80 வருடம்.

4. **ஆயுதம்**

படைவீரர்கள் ஆயுதம் ஏந்திப் போர் செய்தனர்.

5. **ஆற்றல்**

குழந்தைகளுக்கு ஆற்றல் சக்தி அதிகம்.

6. **ஆசான்**

**ஆசான் மனம் அறிந்து நடந்து கொள்ள வேண்டும்.**

7. **ஆண்**

**ஆண் பெண் இருவரும் சமம்.**

8. **ஆடுதல்**

**மலர் பரத நாட்டியம் ஆடினாள்.**

9. **ஆகாயம்**

**ஆகாயம் பரந்து விரிந்து எல்லையில்லாதது.**

10. **ஆழம்**

**கிணற்றின் ஆழம் அதிகம்.**

11. **ஆவணி**

**குகன் ஆவணி மாதத்தில் பிறந்தான்.**

12. **ஆடம்பரம்**

**ஆடம்பர வாழ்க்கை நல்லது அல்ல.**

Notebook Writer
Notebook Writer
Notebook Writer

13. ஆவாரம் பூ

ஆவாரம் பூ மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

14. ஆலை

சிவகாசியில் பட்டாசு ஆலைகள் உள்ளன.

15. ஆங்கிலம்

சூர்யா ஆங்கிலத்தில் சரளமாக பேசுவான்.

16. ஆத்திச்சூடி

ஆத்திச்சூடியை எழுதியவர் ஔவையார்.

17. ஆலயம்

வெள்ளி தோறும் ஆலயம் செல்வோம்.

18. ஆவேசம்

மக்கள் செய்தியைக் கேட்டு ஆவேசம் அடைந்தனர்.

Notebook Writer

**19. ஆரம்பம்**

**கோடைத் திருவிழா இன்று ஆரம்பம் ஆகிறது.**

**20. ஆசீர்வாதம்**

**அனைவரும் மணமக்களை ஆசீர்வாதம் செய்தனர்.**

Notebook Writer
Notebook Writer
Notebook Writer
Notebook Writer